# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 16 மடல் 3 | மார்ச் – 2016 | ₹1.00


## தேசிய மாநாடு




இந்தியக் கால்நடை ஒட்டுண்ணியியல் மேம்பாட்டுச் சங்கத்தின் 25ஆவது கால்நடை ஒட்டுண்ணியியல் தேசிய மாநாடு மற்றும் "ஒரே ஆரோக்கியத்திற்கான அணுகுமுறை: ஒட்டுண்ணிகளைக் கட்டுப்படுத்தும் உறுதியான தீர்வு" என்ற தலைப்பில் தேசியக் கலந்தாய்வரங்கு, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை ஒட்டுண்ணியியல் துறை மூலம் 17.02.2016முதல் 19.02.2016வரை நடத்தப்பட்டது. 17.02.2016அன்று நடைபெற்ற துவக்க விழாவில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் எஸ். கீதாலட்சுமி அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். இந்தியக் கால்நடை ஒட்டுண்ணியியல் மேம்பாட்டுச் சங்கத்தின் துணைத் தலைவர் டாக்டர் ஜெ.டி. கோஷ், இணைச் செயலாளர் டாக்டர் வி. செங்கல்வராயலு ஆகியோர் சங்கத்தின் பல்வேறு செயல்பாடுகள் குறித்துப் பேசினர். இந்தியா மற்றும் அயல்நாடுகளைச் சார்ந்த சிறப்பு விருந்தினர்கள், இங்கிலாந்தின் எடின்பர்க் பல்கலைக்கழகம், பெல்ஜியம் பல்கலைக்கழகம், பஹ்ரைன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் மற்றும் அமெரிக்காவின் ஒக்லகாமா ஸ்டேட் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு மாணவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். 19.02.2016அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரை மற்றும் சுவர் இதழ் சமர்ப்பித்தலில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார். பல்கலைக்கழகக் கால்நடை நலக் கல்வி மையத்தின் இயக்குநர் முனைவர் பி.ஜ. கணேசன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அமைப்புச் செயலாளர் மற்றும் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் முனைவர் பாஸ்கரன் ரவி லதா அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

## தேசியக் கருத்தரங்கு

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் துறை (இறைச்சி அறிவியல்)மூலம் இறைச்சி அறிவியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு கூட்டம் மற்றும் "உணவு: பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழல்" குறித்த தேசியக் கருத்தரங்கு ஆகியவை சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 25.02.2016 மற்றும் 26.02.2016ஆம் தேதிகளில் நடைபெற்றன. வேலூர், தொழில்நுட்ப நிலையத்தின் துணைவேந்தர் டாக்டர் ஆனந்த் ஏ. சாமுவேல் அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார். தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவச் சேவைகள் துறையின் இயக்குநர் திரு. டி. ஆப்ரகாம் இ.ஆ.ப., அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று, வாழ்நாள் சாதனையாளர் விருதினைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் கு. துளசி, புதுச்சேரி இராஜீவ் காந்தி கால்நடை மருத்துவக் கல்லூரியின் முன்னாள் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வி. கேசவ ராவ், ஐதராபாத் தேசிய இறைச்சிவள ஆராய்ச்சி மையத்தின் முன்னாள் தகைசால் பேராசிரியர் முனைவர் எஸ்.ஆர். ஆஞ்சநேயலு ஆகியோர்க்கு வழங்கினார். பல்கலைக்கழகப்



பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இறைச்சி அறிவியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் முனைவர் ராபின்சன் ஜெ.ஜெ. ஆப்ரகாம் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். 26.02.2016அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் தலைமை வகித்தார். பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் ம. பாபு அவர்கள் நிறைவுரை ஆற்றி, சிறந்த கட்டுரை அளித்தல் விருதுகள் வழங்கினார். கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் முனைவர் டி. பாஸ்கரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மொத்தம் 227 சிறப்பு விருந்தினர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## கல்லூரி, விடுதி ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழா



ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கல்லூரி மற்றும் விடுதி ஆண்டு விழா 25.02.2016

அன்று கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் க. இராமசாமி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, பல்வேறு விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் விழாத் தலைமையுரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் க. ந. செல்வக்குமார் அவர்கள் கல்லூரி ஆண்டறிக்கை வாசித்தார். கல்லூரியின் விடுதிக் காப்பாளர் முனைவர் பி. சாமுவேல் மாசிலாமணி ரொனால்டு அவர்கள் விடுதி ஆண்டு அறிக்கை சமர்ப்பித்தார். முன்னதாக, மாணவர் மன்றத் துணைத்தலைவர் முனைவர் இரா. அண்ணல் வில்லி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். நான்காம் ஆண்டு மாணவர் இரா. ராகுல்ராஜ் நன்றியுரை நல்கினார். இதனைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கல்லூரியின் விளையாட்டு விழா 24.02.2016 அன்று நடைபெற்றது. விழாவில் மதுரை மண்டல உணவுப் பொருள் வழங்கல் சிறப்புப் புலனாய்வுத் துறையின் காவல் துறைக் கண்காணிப்பாளர்



மற்றும் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர் மருத்துவர் பி. சாமிநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கிச் சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். முன்னதாக, உடற்கல்விச் செயலாளர் முனைவர் சி. அருண்குமார் அவர்கள் விளையாட்டு ஆண்டு அறிக்கை வாசித்து அனைவரையும் வரவேற்றார். கல்லூரியின் உடற்கல்வி மாணவ பிரதிநிதி செல்வன் ப.ரா. புவனேஷ்குமார் நன்றி கூறினார்.

### வெற்றிபெறும் ஆராய்ச்சித் திட்டங்களை உருவாக்குவதல் பயிற்சி



பல்கலைக்கழகமும், ஐதராபாத் தேசிய வேளாண் ஆராய்ச்சி மேலாண்மைக் கழகமும் இணைந்து "வெற்றிபெறும் ஆராய்ச்சித் திட்டங்களைஉருவாக்குதல்"பயிற்சியைநாமக்கல்,கால்நடைமருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 18.02.2016முதல் 21.02.2016 வரை நடத்தின. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்துத் துவக்கவுரை ஆற்றினார். ஐதராபாத், தேசிய வேளாண் ஆராய்ச்சி மேலாண்மைக் கழகத்தின் இயக்குநர் முனைவர் டி. ராமாராவ் அவர்கள் தலைமை வகித்தார். பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் ம. பாபு அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 25 ஆசிரியர்கள் பயிற்சியில் பங்கேற்றனர். பயிற்சியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநர் அவர்கள் சிறப்புரையாற்றினார். பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வி. ரமேஷ் சரவண குமார் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கி நிறைவுரை ஆற்றினார்.

### தேசிய அளவிலான பயிற்சி

- சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை நோய்க் குறியியல், நன்னெறி மற்றும் சட்டவியல் துறையின் ஆசிரியர் உயர்கல்வி மையம்மூலம் "நோய்க்குறி உடற்கூறியல், உடலியங்கியல் மற்றும் உயிர் வேதியியல் அடிப்படையில் கால்நடை மருத்துவச் சிகிச்சைக்கான செயல்திறன் மேம்பாடு" குறித்த தேசியப் பயிற்சி,



  03.02.2016 முதல் 23.02.2016 வரை 21 நாட்கள் நடைபெற்றது. 23.02.2016அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துத் தலைமையுரை ஆற்றினார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன், பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் ஆர். ஜெயபிரகாஷ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக, உயர்கல்வி மைய இயக்குநர் மற்றும் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் வரவேற்புரை ஆற்றிப் பயிற்சி அறிக்கை அளித்தார். பேராசிரியர் முனைவர் ஏ.பி. நம்பி அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கோழியின உயர்கல்வி மையத்தில் "சிறிய மற்றும் நடுத்தரப் பண்ணையாளர்களின் பொருளாதார வளம் பெருகப் பல்வகைக் கோழி உற்பத்திக்கான செயல்நெறி மற்றும் மேம்பாட்டு முறைகள்" என்ற தேசிய அளவிலான பயிற்சி 03.02.2016முதல் 23.02.2016வரை நடைபெற்றது. பயிற்சியின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் தலைமை வகித்து, பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப் குமார் அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று, பயிற்சிக் குறுந்தகடு மற்றும் கையேடு வெளியிட்டு நிறைவுரை ஆற்றினார்.

### நிதியுதவிப் பயிலரங்கு

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கால்நடை உயிர்த் தொழில்நுட்பவியல் மேம்பாட்டு மையத்தின் நிதியுதவியுடன் "கோழியின நோய் கண்டறிதலில் புரத அமைப்பு மற்றும் மூலக்கூறு ஆய்வுத் தொழில்நுட்பங்களின் பயன்பாடு" குறித்த மூன்று நாள் பயிலரங்கு, சென்னை கால்நடை மருத்துவ கல்லூரியின் கால்நடை உயிர்த்தொழில்நுட்பத் துறைமூலம் 09.02.2016 முதல் 11.02.2016 வரை நடத்தப்பட்டது. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சார்ந்த 14 முதுநிலைப் பட்ட மாணவர்கள் பயிரலங்கில் பங்கேற்றனர். 11.02.2016அன்று நடைபெற்ற பயிலரங்கின் நிறைவு

விழாவில், அமைப்புச் செயலாளர் மற்றும் அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் க. குமணன் அவர்கள் பயிலரங்க அறிக்கை அளித்தார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பங்கேற்பாளர்களுக்குக் சான்றிதழ் வழங்கினார். பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் முனைவர் ஏ. பழனிசாமி அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

### பல்கலைக்கழக ஆராய்ச்சித் தொகுப்பு நிதித் திட்டங்களின் ஆய்வுக் கூட்டம்

பல்கலைக்கழக ஆராய்ச்சித் தொகுப்பு நிதித் திட்டங்களின் ஆய்வுக் கூட்டம், பல்கலைக்கழகத் தலைமை நிலையத்தில் 16.02.2016 அன்று நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் ரூபாய் 70.06 இலட்ச மதிப்பிலான 31 நிறைவடைந்த ஆய்வுத் திட்டங்களை ஆய்வு செய்தார். துணைவேந்தர் அவர்கள், பண்ணையாளர்களுக்குப் பயன்படக்கூடிய ஆய்வு முடிவுகளை வெளியிட ஆய்வுத் திட்டங்களின் முதன்மை ஆய்வாளர்களுக்கு ஆலோசனை வழங்கி, புறநிலை நிதியுதவித் திட்டங்களைப் பெறுவதற்கான ஆய்வு முன்மொழிவுகளை அளிக்கும்படி அறிவுறுத்தினார். மேலும், பல்கலைக்கழகப் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கருவிமயமாக்கல் துறையைப் பயன்படுத்திக்கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் ம. பாபு அவர்கள் கூட்டத்தில் பங்கேற்றார்.

### மூன்று நாள் பயிலரங்கு

காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையமும் தமிழ்நாடு அரசின் அறிவியல் நகரமும் இணைந்து "ஊரக ஏழை மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு அறிவியல்" என்ற மூன்று நாள் பயிலரங்கை 10.02.2016முதல் 12.02.2016வரை நடத்தின. இந்த மூன்று நாள் பயிலரங்கில் "வெள்ளாடு வளர்ப்பு", "ஜப்பானியக் காடை வளர்ப்பு", "கறவை மாடு வளர்ப்பு" ஆகிய ஒரு நாள் பயிரலங்குகள் இடம்பெற்றன. பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வி. ரமேஷ் சரவண குமார் அவர்கள் வெள்ளாடு வளர்ப்பு குறித்த பயிலரங்கில் பங்கேற்றுப் பயிலரங்கக் கையேடு வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றினார். அறிவியல் நகரத்தின் துணைத் தலைவர் திரு. உ. சகாயம் இ.ஆ.ப., அவர்கள் மூன்றாவது பயிலரங்கின் நிறைவு விழாவில் பங்கேற்று, பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். வேலூர், காஞ்சிபுரம், ஈரோடு, மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களைச் சார்ந்த 75 விவசாயிகள் பயிலரங்குகளில் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

### பயிலரங்கு

காட்டுப்பாக்கம், கால்நடை உணவியல் நிலையம்மூலம் "ஒருங்கிணைந்த கால்நடை வளர்ப்பிற்கு வேளாண் காடுகள்" குறித்த ஒரு நாள் பயிலரங்கு, 24.02.2016 அன்று நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவண குமார் அவர்கள் பயிலரங்கைத் துவக்கிவைத்து, பயிலரங்க மலர் வெளியிட்டார். பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் ம. பாபு, கிருஷ்ணகிரி கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ம. முருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நிறைவு விழாவில் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார் அவர்கள் பங்கேற்று, நிறைவுரை ஆற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எச். கோபி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மொத்தம் ஒன்பது கால்நடை விரிவாக்கப் புலப் பேராசிரியர்கள் பயிலரங்கில் பங்கேற்றனர்.

### மாநில அளவிலான பயிலரங்கு

சேலம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் சார்பாக "கால்நடைப் பராமரிப்பில் கள அளவில் உள்ள பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும்" என்ற ஒரு நாள் மாநில அளவிலான பயிலரங்கு 10.02.2016அன்று நடைபெற்றது. பயிற்சி மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கொ.ஆ. துரைசாமி அவர்கள் வரவேற்புரையாற்றினார். கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் திரு. சே. லோகநாதன் அவர்கள் பயிலரங்கைத் துவக்கிவைத்தார். நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் இல. குணசீலன், கால்நடைப் பராமரிப்புத் துறையின் உதவி இயக்குநர் திரு. எஸ். ராஜேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 100 கால்நடை உதவி மருத்துவர்கள் பயிலரங்கில் பங்கேற்றனர்.

### கால்நடை மருத்துவ முகாம்

- ★ ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் கால்நடை மருத்துவ முகாம் 09.02.2016அன்று வீரக்குறிச்சி கிராமத்தில் நடைபெற்றது. முகாமில் 442 கால்நடைகளுக்குப் பல்வேறு நோய்களுக்கான சிகிச்சை அளிக்கப்பட்டது. முகாமின் ஒரு பகுதியாகக் கால்நடை அறிவியல் கண்காட்சியும், கால்நடை வளர்ப்பு குறித்த குறும்படங்களும் திரையிடப்பட்டன. கால்நடை வளர்ப்பு குறித்த தொழில்நுட்ப ஆலோசனைகளும் அது தொடர்பான மடிப்பிதழ்களும் வழங்கப்பட்டன.
- ★ திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் திருநெல்வேலி, வள்ளியூர் ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம் மற்றும் சுஸ்லோன் அறக்கட்டளையும் இணைந்து கால்நடை மருத்துவ முகாமை அயல்பட்டி கிராமத்தில் 23.02.2016அன்று நடத்தின. இதில் 206 கால்நடைகளுக்குப் பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

### நாய்களுக்கான சிறப்பு உணவு விற்பனை துவக்கம்



பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உற்பத்தி பொருட்கள் தொழில்நுட்பத் (இறைச்சி அறிவியல்) துறையின் செல்லப்பிராணிகள் உணவு தயாரிப்பு மையத்தில் தயாரிக்கப்பட்ட நாய்களுக்கான சிறப்பு உணவின் (PET FEAST and PET FEAST Plus) முதல் விற்பனையைக் கால்நடைச் சிகிச்சை கற்பித்தல் வளாகத்தில் 18.02.2016அன்று தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன், பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவணகுமார் மற்றும் கல்லூரிப் பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

### பசுந்தீவன நாற்றுப்பண்ணைத் துவக்கம்

காட்டுப்பாக்கம் கால்நடை உணவியல் நிலையத்தில் பசுந்தீவன விதைக்கரணை உற்பத்திப் பிரிவு குறித்த சுழல்நிதித் திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட பசுந்தீவன நாற்றுப்பண்ணையைப் பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவண குமார் அவர்கள் 10.02.2016அன்று துவக்கிவைத்தார். சென்னை, அறிவியல் நகரத்தின் முதுநிலை அறிவியலாளர் டாக்டர் ஜெ. தேவசேனாதிபதி அவர்கள் கிளிரிசிடியா மரத்தீவனக் கன்றுகளை பிளாஸ்டிக் பைகளில் நட்டார்.

Posted on 29.03.2016 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 28.03.2016

**Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17**
**Registration No.TN/TBM/32/2015-17**

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.
Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. S.A. Asokan, M.V.Sc., Ph.D., Phone : 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**

## பெருமைமிகு கால்நடை மருத்துவர் விருது



பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள், கால்நடை மருத்துவத்திற்கு ஆற்றிய சிறந்த பங்களிப்பு மற்றும் உன்னதச் சேவையை அங்கீகரிக்கும் வகையில், 28.02.2016அன்று புவனேஸ்வரில் நடைபெற்ற இந்தியக் கால்நடை மருத்துவ ஆராய்ச்சி மேம்பாட்டுச் சங்கத்தின் 16ஆவது ஆண்டு கூட்டத்தில் "பெருமைமிகு கால்நடை மருத்துவர் விருது–2016"அளித்துச் சிறப்பிக்கப்பட்டார்.

## துணைவேந்தர் பங்கேற்பு



பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள், 22.02.2016 அன்று கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விளையாட்டரங்கில் நடைபெற்ற 16ஆவது அனைத்திந்திய வேளாண் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டியின் தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கொடியை ஏற்றி, போட்டியைத் துவக்கி வைத்து உரையாற்றினார். அவர் தமது உரையில் மாணவர்கள் பல்வேறு அணிகளின் பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் பழக்கவழக்கங்களை அறிந்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்.

## மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் மாணவர்கள் சந்திப்பு

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறைமூலம் இளநிலைப் பட்ட இறுதியாண்டு மாணவர்களுக்காக மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் சந்திப்பு 25.02.2016அன்று நடத்தப்பட்டது. நிகழ்ச்சியில் 125 மாணவர்கள் பங்கேற்று மருந்து தயாரிப்பு நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினர். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன், பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் ஆர். ஜெயபிரகாஷ், பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் முனைவர் கே.வி. வெங்கடேஸ்வரன் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றினர்.

## நெருப்புக்கோழிகள் பிரிவு துவக்கம்



ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நெருப்புக்கோழிகள் பிரிவு துவங்கப்பட்டுள்ளது. இப்பிரிவைக் கல்லூரியின் முதல்வர் முனைவர் க. ந. செல்வக்குமார் அவர்கள் 03.02.2016அன்று துவக்கி வைத்தார். இப்பிரிவு, நெருப்புக்கோழி மேலாண்மை பற்றிய ஆராய்ச்சிகள் மற்றும் கால்நடை மருத்துவப் பட்ட படிப்பு மாணவர்களுக்குப் பயன்படும்.

## நாட்டு நலப்பணித் திட்டப் பணிகள்



உலகப் புற்றுநோய் தினம்–2016ஐ முன்னிட்டு ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுமூலம் வாய் சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சி 26.02.2016அன்று நடத்தப்பட்டது. நிகழ்ச்சியைக் கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் துவக்கிவைத்தார். முகாமில் பல் மருத்துவர் வி. உஷா குழுவினர் 127 மாணவர்களுக்கு வாய் மற்றும் பல் பரிசோதனை செய்து ஆலோசனைகள் வழங்கினர். நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் வ. ரங்கநாதன் மற்றும் உதவிப் பேராசிரியர் முனைவர் ப. சங்கர் ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர். முகாமில் 127 மாணவர்கள் பங்கேற்றனர்.

## விருது

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை ஒட்டுண்ணியியல் துறைப் பேராசிரியர் முனைவர் நா. ஜெயதிலகன் அவர்கள் 17.02.2016முதல் 19.02.2016வரை சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற கால்நடை ஒட்டுண்ணியியல் குறித்த 25ஆவது தேசியக் கருத்தரங்கில் 2016ஆம் ஆண்டிற்கான ஸ்ரீ. எஸ்.எம். இஸ்மாயில் விருது பெற்றார்.

## பணி ஓய்வு



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், விலங்கின மரபியல் மற்றும் இனப்பெருக்கத் துறையின் உடனாள் திரு. சு. மாதய்யன் அவர்கள் 29.02.2016 அன்று பணி ஓய்வு பெற்றார். 10.02.1958இல் பிறந்த இவர், 30 ஆண்டும் மற்றும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.